தென்காசியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், அமைக்கப்பட்ட மாநில அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியை நேற்று திறந்துவைத்து பேசிய அவர், அதிகாரிகளை தேடி மக்கள் சென்ற நிலை மாறி, மக்களைத் தேடி அதிகாரிகள் செல்லும் நிலை மாநிலத்தில் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

ஏழை எளிய மக்களின் வளர்ச்சியை நோக்கமாக கொண்டு மாநில அரசு திட்டங்களை தீட்டி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, தென்காசி மாவட்டத்தில் 3 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பள்ளி கட்டிடம் உட்பட பல்வேறு அரசு துறைக்கான கட்டிடங்களை அமைச்சர் திறந்துவைத்தார்.

<<<<<>>>>>

இஸ்லாமிய மக்களின் நலன்களை பேணுவதில் திமுக அரசு என்றும் உறுதியுடன் செயல்படும் என்று மாநில இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சார்பில் புனித ரமலான் இஃப்தார் நிகழ்ச்சியில் பேசிய அவர், பிறருக்கு உதவுகின்ற ஈகை குணத்தை ரமலான் வலியுறுத்துவது போன்று, திமுக அரசு எல்லோருக்கும் எல்லாம் என மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றிவருவதாக கூறினார்.

<<<<<>>>>>

சிமி என்று அழைக்கப்படும் இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கம் மீதான தடை கடந்த ஜனவரி மாதம் 29-ஆம் தேதிமுதல் நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

சட்டவிரோத செயல்கள் தடுப்புச்சட்டத்தின்கீழ், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதையொட்டி, தமிழக அரசும், சிமி இயக்கத்தை தடை செய்து அரசாணை வெளியிட்டுள்ளது.

<<<<<>>>>>

*இருவரிச் செய்திகள்*

தாய்லாந்தில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை கட்டுப்படுத்த ராணுவத்தின் உதவியை நாட அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

<<<<<>>>>>

தேசிய தடுப்பூசி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

<<<<<>>>>>

ஹைதராபாதில் நடைபெறும் சர்வதேச ஆன்மிக திருவிழாவின் நிறைவு நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் இன்று உரையாற்றுகிறார்.

<<<<<>>>>>

அமலாக்கத்துறை அனுப்பிய சம்மனுக்கு, தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் நேரில் ஆஜராக வேண்டும் என்று தில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

<<<<<>>>>>

கர்நாடக ஆளுநர் திரு தாவர் சந்த் கெலாட் நேற்று ராமேஸ்வரத்தில், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, திருப்பத்தூர் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் மாவட்ட ஆட்சியர் திரு தர்பகராஜ் நேற்று ஆலோசனை நடத்தினார்.

<<<<<>>>>>

கோவை அரசு தொழில்நுட்பக்கல்லூரியில் மேம்பட்ட கணினி மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகள் குறித்த தேசிய கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது.

<<<<<>>>>>

